T. N. L. A. DU LEGISLATURE LIBRARY
1 - OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 ஏப்ரல் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கள்ளிக்குடி முருகன் டாக்கீசில் கள்ள டிக்கட்டுகள் கைப்பற்றல்.

*குறுகியகால வினா எண் 5.— **திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அருகே கள்ளிக்குடியில் உள்ள முருகன் டாக்கீசில் 1970 மார்ச் மாதத்தில், கள்ள சினிமா டிக்கட் இருந்து கைப்பற்றப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அந்த திரைப்பட அரங்கின் பங்குதாரர்கள் யார் யார் ?

(எ) எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 1970-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8-ம் நாள் திருமங் கலத்திற்கு அருகில் உள்ள கள்ளிக்குடி முருகன் டாக்கீசில் இரண்டா வது காட்சியின் போது போலி அனுமதி சீட்டுகள் கைப்பற்றப்பட்டன.

(உ) கேளிக்கை வரி செலுத்துவதற்கான அனுமதி கோரிய மனுவில் திரு. கே. சண்முக சுந்தரம் என்பவர் உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திரைப்பட அரங்கின் பங்குதாரர்கள் பற்றி தகவல் இல்லை.

(எ) கேளிக்கை வரி அலுவலர் ஏய்க்கப்பட்டவரி, மேல்வரி, ஆகியவற்றை நிர்ணயித்தலும், ஏனைய பிற நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றார்.

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, 8—3—1970 அன்று கள்ளிக்குடியில் நடத்தப்பட்ட சோதனையில் எத்தனை ரூபாய் பெறுமானம் அளவுக்கு போலி டிக்கட்டுகள் கைப்பற்றப்பட்டன ? இதன் உரிமையாளர் அல்லது பங்குதாரருக்கும் ஆளும் கட்சிக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அன்றைய தினம் நடைபெற்ற காட்சிக்கு கேளிக்கை வரி எவ்வளவு பெறுமானம் என்ற குறிப்பு இல்லை. ஆனால், வரி ஏய்க்கப்பட்ட தொகைக்குப் புள்ளி விவரம் இருக்கிறது. வரி ஏய்க்கப்பட்ட தொகை ரூ. 872 என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. " ஆளுங்கட்சிக்கும் இவர் களுக்கும் தொடர்பு உண்டா ?" என்று கேட்பது அர்த்தமற்றது என்பதை நான் தெளிவாக தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. கே. விநாயகம். : சார், இப்படி ஏமாற்றியதன் விளைவாக நமக்கு ஏற்படுகிற நஷ்டங்கள் பல இடங்களில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தடுப்பதற்கு ஏதாவதொரு "இன்ஸ்பெக்டிங் ஸ்க்வாடு" மாதிரி வைப்பதற்கு அரசு முன் வருமா ? ஆளுங்கட்சியோடு சேர்ந்தவரல்ல என்று சொல்லிவிட்டால் போதும். அது அர்த்த மற்ற கேள்வி என்பதில் என்ன பொருள் இருக்கிறது என்று விளக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பங்கு தாரர்கள் யார் யார் என்று பெயர்கள் தெரியவில்லை என்று நான் பதில் சொன்னேன். "ஆளுங்கட்சிக்காரரா ?" என்றால், "காங்கிரஸ்கட்சிக்காரர்" என்று நான் சொல்லி விடுவது ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. குற்றச்சாட்டாகக் கூறக் கூடாது. பங்கு தாரர்கள் பெயர் பற்றி எங்களுக்குத் தகவல் இல்லை. ஸினிமாடோ-கிராப் சட்டத்தின்படி கேளிக்கை வரி செலுத்துவதற்கான அனுமதி கோரும் மனுவில் உரிமையாளர் பெயர் மட்டும் தான் இருக்கும். அதில் பங்குதாரர்கள் யார் யார் என்று குறிப்பிட்டிருக்காது. ஒருவேளை கனம் உறுப்பினரிடம் தகவல் இருந்தால் கொடுக்கலாம். அதை விட்டு விட்டு, "ஆளுங்கட்சிக்காரரா ?" என்று கேட்பதென்றால் "இல்லை ; காங்கிரஸ்காரர்" என்று நான் பதில் சொல்லிவிட எவ்வளவு நேரம் ஆகும் ? அதனால்தான், அவ்வாறு குறிப்பிட்டேன்.

மேலும், இதுபோன்ற வரி ஏய்ப்புக்களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று டி.சி.டி.ஓ.க்களுக்கெல்லாம் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. கனம் உறுப்பினர் குறிப்பிடுவது போன்ற ஸ்க்வாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

State quota of I.A S Cadre

*** 710 *Q*—Thiru G GOMATHYSANKRA DIKSHIDAR Will the Hon. Chief Minister be pleased to state—**

(*a*) Whether th State quota of I.A.S. Cadreis being given mainly to officers working in the Revenue Department;

(*b*) the reasons therefor ; and

(*c*) the steps taken by the Government to uphold the claims of officers working in other departments.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள 1954-ம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (பணிக்கமர்த்தும்) விதிகளின் 9-வது விதி, ஒவ்வொரு மாநிலத்தின் இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதிதரத்தின் பதவி உயர்வுப் பங்கீட்டளவில் 85 சதவீதம், ஸ்டேட் சிவில் சர்வீஸ் அதிகாரிகளைக் கொண்டு, அதாவது வருவாய்த்துறை யில் பணியாற்றும் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட வேண்டு மென்றும், எஞ்சிய 15 சதவீதப் பதவி உயர்வுப் பங்கீட்டளவு, ஸ்டேட் ஸிவில் சர்வீசில் அல்லாத பிற பணிகளில் உள்ள அதிகாரி களுக்கு அதாவது, பிற துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்காக, ஒதுக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிடுகிறது.

(உ) ஸ்டேட் ஸிவில் சர்வீஸில் அல்லாத பிற பணிகளில் உள்ள அதிகாரிகளுக்கான பதவி உயர்வுப் பங்கீட்டுச் சதவீதத்தை அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசு நிச்சயித்துள்ள காரணத் தால், இந்த அதிகாரிகளின் நலனும் அந்த அடிப்படையில் பாதுகாக்கப்படுகிறது.